**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 15.04.2026

அசல் வழக்கு எண். 168/2013

வா.சா. 1 – ஸ்ரீதர் ரெட்டி , த/பெ. ராஜகோபால் ரெட்டி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

ராமாராவ் தெரியுமா என்றால் தெரியும். ராமாராவ் உங்களுடைய நிலம் மற்றும் பிரதிவாதி கண்ணன் சீனிவாசன் நிலங்களை அபிவிருத்தி செய்வதாக ஒப்பந்தம் கொள்கை அளவில் இருந்தது என்றால் சரிதான். நீங்கள், கண்ணன் சீனிவாசன் மற்றும் ராமாராவ் ஆகியோர் அபிவிருத்தி ஒப்பந்தம் செய்வதாக கொள்கை அளவில் இருந்தது என்றால் சரிதான். பேச்சுவார்த்தைக்கு பிறகு அந்த ஒப்பந்தம் ஃபெயிலியர் ஆகிவிட்டது என்றால் சரிதான் நிபந்தனைகளுக்கு ஒத்துவரவில்லை ஆகவே ஃபெயிலியர் ஆகிவிட்டது. ஆனால் ராமாராவுக்கு நாங்கள் மட்டும் ஜாயிண்ட் வெஞ்சர் அக்ரிமெண்ட் போட்டோம். அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் ஜாயிண்ட் வென்ச்சர் அக்ரிமெண்ட் போட்டதும் கண்ணன் சீனிவாசன் இடமும் பக்கத்தில் பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான் .கண்ணன் சீனிவாசன் இடத்தை கொடுத்தால்தான் ஜாயிண்ட் வென்ச்சர் அக்ரிமெண்ட் பூர்த்தி ஆகும் என்றால் சரியில்லை. அப்படி இருக்கும் சூழ்நிலையில் ஜாயிண்ட் வென்ச்சர் அக்ரிமெண்ட் ராமாராவ் என்பவருக்கு போட்டது சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்றால் நாங்கள் புரொபோசல் ரெடி செய்தோம் ஒத்து வரவில்லை அனைத்து டிராப்களையும் கண்ணன் சீனிவாசன் கிழித்துப் போட்டுவிட்டார். மேற்படி விவரங்கள் பற்றி ராமராவ் என்பவர் கண்ணன் சீனிவாசனுக்கு நோட்டீஸ்

கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு இருக்கும் சூழ்நிலையில் கண்ணன் சீனுவாசன் மற்றும் உங்களுக்கு என்ன பரஸ்பர அனுகூலம் என்று உங்கள் வழக்கில் ஏன் கூறினீர்கள் என்றால் விற்பனை ஆவணத்திற்கு சம்பந்தமில்லை. ஆனால் மொத்தமாக கொடுத்தால் பெரிய லாபம் கிடைக்கும் என்பதால் அவ்வாறு கொடுத்தேன். மேற்படி நீங்கள் சொன்ன விபரங்களை ஆவணமாக எழுதினீர்களா என்றால் எழுதவில்லை. ஆகவே கிரையப்பத்திரம் ராமாராவ் அவர்களின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பொறுத்துதான் அமையும் என்றால் சரியில்லை. உங்களது வழக்குரையில் கிரையத்தொகை ரூ.4,52,000/- குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அக்ரிமெண்ட் கிழித்துப் போட்டு விட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள் அது நகல் உங்களிடம் இருந்தது என்றால் என்னிடம் இல்லை. வா.சா.ஆ1 கிரைய பத்திரம் ரெடி செய்தது யார் என்றால் நான் தான் ரெடி செய்தேன். அக்ரிமெண்டு கிழித்து போட்டு விட்டதாக சொல்கிறீர்கள் அந்த அக்ரீமெண்ட் பற்றி பத்திரத்தில் எதுவும் எழுதவில்லை என்றால் எழுதவில்லை தான். ரூ.4,52,000/- பணம் குறித்து போலீஸ் புகாரில் கூட நீங்கள் சொல்லவில்லை என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் மாற்றி ஞாபகம் இல்லை என்று சொல்கிறார் அது பதிவு செய்யப்பட்டது. சுவதீனம் கொடுத்து விட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள் அதைக் கூட போலீஸ் புகாரில் நீங்கள் குறிப்பிடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. பிரேமா கண்ணன் அவர்களது இறப்பு மற்றும் வாரிசு சான்று வாங்கி பார்த்தீர்களா என்றால் அப்பொழுது ஜெராக்ஸ் கொடுத்தார் பார்த்தேன். சதீஷ் கண்ணன் மற்றும் அனிதா கண்ணன் அவர்களின் பொது அதிகார பத்திரங்களை நீங்கள் பார்த்தீர்களா என்றால்

ஞாபகம் இல்லை. பொது அதிகாரம் பார்த்த பிறகும் வா.சா.ஆ1 சதீஷ் கண்ணன் மற்றும் அனிதா கண்ணன் தானம் கொடுத்ததாக ஏன் கண்டுள்ளது என்றால் ஜெராக்ஸ் வைத்து தான் ரெடி செய்தேன். ஒரிஜினல் கிரைய ஒப்பந்தம் உங்களிடம் இருந்தது என்றால் எந்த ஒரிஜினல் என்று தெரியவில்லை. எத்தனை ஒரிஜினல் இருக்கிறது என்றால் ஏற்கனவே நாங்கள் அவர்களிடம் பதிவு செய்து ஆவணம் வாங்கியுள்ளோம். வழக்கு சம்பந்தமான ஒரிஜினல் பார்த்தீர்களா என்றால் வாங்கவில்லை. நீங்கள் வாங்காத அசல் பத்திரத்தை முதல் பிரதிவாதி கிழித்து விட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள் என்றால் அந்த ஆவணத்தை நான் சொல்லவில்லை. சுவாதீனத்தில் இருப்பதாக சொல்கிறீர்கள் பட்டாவினை மாற்ற மனு கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. கிரையத்தொகை முழுவதும் கொடுத்ததாக சொல்கிறீர்கள் அப்படி இருக்கும் பட்சத்தில் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன என்றால் இந்த வழக்கினை நடத்தி வருகிறோம். தாவா சொத்தின் பத்திர அளவுக்கும் வருவாய் ஆவணங்களின் அளவுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்றால் இன்றைய தேதியில் கிடையாது 22 சென்ட் ரிஜிஸ்ட்ரேஷன் பண்ண வேண்டியது இருக்கிறது அதில் வித்தியாசம் உள்ளது. அந்த 22 சென்ட்க்கு மட்டுமே பிரச்சனை தவிர வழக்கு சொத்திற்கு பிரச்சனை இல்லை என்று சொன்னால் சரிதான் 22 சென்ட் நிலத்தை கண்ணன் சீனிவாசன் என்பவரிடமிருந்து வாங்குவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 22 சென்டிற்கு சர்வே எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. 22 சென்ட் நிலம் உங்களது

வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் அது வேறு இது வேறு ஆகும். இந்த வழக்கில் அக்ரீமெண்ட்டே கிடையாது என்றால் சரியில்லை நீங்களே எழுதிக் கொண்டு வந்து விட்டதை அவர் ஒத்துக் கொள்ளவில்லை என்றால் சரியில்லை. பதிவு செய்யும் நாள் என்று முடியாது அன்று சொல்லிவிட்டார் என்றால் சரியில்லை. கட்டாய பதிவிற்கு 120 நாட்களுக்கு உள்ளாக கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. மேற்படி 120 நாட்களுக்கு உள்ளாக குறைந்த பட்சம் ஒரு நோட்டீஸ் கூட கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த அக்ரிமெண்ட் என்று ஒன்று கிடையாது அப்படியே இருந்தாலும் கால தோஷத்தால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram